கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

11 OCT 2014

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2011/2012 (SEP/OCTOBER 2014)

PHYS-**3203**-விமர்சன கோட்பாட்டு மெய்ப் பொருளியல்

**(Critical theories and its Relevance to Philosophy )**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி-I

01.

அ) "விமர்சனக் கோட்பாடு மாக்ஸிசத்தினையும் கடந்து செல்கின்றது" இக்கூற்றினை விளக்குக.

(9புள்ளிகள்)

ஆ) "இலக்கிய விமர்சனக் கோட்பாடு சமூக மாற்றம் சம்பந்தமாகவோ அல்லது சமூகத்தை பகுப்பாய்வு செய்வதிலோ ஈடுபடுவதில்லை மாறாக எடுத்துரைப்புக்களின் பகுப்பாய்வு மீதே தனது கவனத்தை செலுத்துகின்றது" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(8புள்ளிகள்)

இ) "ஊடக மாயை" என்ற இழான் பௌடிரியரின் கருத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(8புள்ளிகள்)

02.

அ) "தனிநபரின் துன்பம் மற்றும் மகிழ்ச்சி என்பவற்றை அடிப்படையாக கொண்டதாக ஹொர்க்கைமரின் சமூக மெய்ப்பொருளியல் காணப்படுகின்றது" இக்கூற்றினை ஆராய்க.

(9புள்ளிகள்)

ஆ) ஹெகலின் சமூக மெய்ப்பொருளியலை ஏன் ஹொர்க்கைமர் விமர்சிக்கின்றார்? விளக்குக.

(8புள்ளிகள்)

இ) விஞ்ஞான நடவடிக்கைகள் தொடர்பாக ஹொர்க்கைமர் முன் வைக்கும் விமர்சனங்களை மதிப்பிடுக.

(8புள்ளிகள்)

03.

அ) "விஞ்ஞானம் கருவியாக பயன்படுத்தப்படும் பொழுது அது அழிவினை ஏற்படுத்தும்" என்ற அடோர்னோவின் கருத்தினை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(9புள்ளிகள்)

ஆ) "மனித துயரங்களுக்கும் பேரழிவிற்கும் காரணம் ஒரு வகை கண்மூடித்தனமான ஆதிக்கம்" என்ற அடோர்னோவின் கருத்தினை மதிப்பிடுக.

(8புள்ளிகள்)

இ) "மாக்ஸ் கால முதலாளித்துவ சமூகத்திலிருந்து தற்கால முதலாளித்துவ சமூகம் பெருமளவிற்கு வேறுபட்டு காணப்படுகின்றது" என்ற அடோர்னோவின் வாதத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(8புள்ளிகள்)

04.

அ) முதலாளித்துவ சமூகத்தில் கலையின் நிலை பற்றிய அடோர்னோவின் நோக்கினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(9புள்ளிகள்)

ஆ) "கலையின் மீளுருவாக்கம்" என்ற பெஞ்சமினின் கருத்தினை புகைப்படக் கலை மற்றும் திரைப்படக் கலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நுணுக்கமாக பரிசீலனை செய்க.

(8புள்ளிகள்)

இ) "ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் மூலமே நகல் அல்ல" என்ற பெஞ்சமினின் நோக்கினை பின் கட்டமைப்பு வாத அடிப்படையில் விளக்குக.

(8புள்ளிகள்)

## பகுதி – II

05. "ஹபமார்ஸின் 'பகுத்தறிவு' என்ற எண்ணக்கரு மனித மகிழ்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப்பட்டது" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(25புள்ளிகள்)

06. தற்போது நடைமுறையில் உள்ள சமூகம் "வெறுமைச் சமூகம்" என மாக்கீயுஸ் அழைப்பதற்கான காரணங்களை பகுப்பாய்வு செய்க.

(25புள்ளிகள்)